கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

# EDUS 4104 Advance Theories in Educational Psychology
## (கல்வி உளவியல் உயர்தரக் கோட்பாடுகள்)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

11 MAY 2015
EASTERN UNIVERSITY

விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) ஒரு பிள்ளையின் உயிரியல் சார் விருத்தியும் எண்ணக்கருவாக்கமும் அப்பிள்ளையின் முழுமையான அறிவாற்றல் முதிர்ச்சிக்கு மிகவும் அவசியமானது என்பதனை பியாஜே எவ்வாறு தனது கொள்கைமூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை விளக்குக.

(13 புள்ளிகள்)

(ஆ) புறூணர் கூறும் அறிகை விருத்தியின் படிநிலைகள் எவ்வாறு பிள்ளைகள் உலகைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஆராய்க.

(12 புள்ளிகள்)

02.(அ) வகுப்பறையில் மாணவர்கள் பிரச்சினை தீர்த்தல் முறையில் கற்கும்போது அவர்களுக்கு அகக்காட்சி சார் கற்றல் முறையானது எவ்வாறு பயன்படுகின்றது என்பதனைப் பகுப்பாய்வு செய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) படைப்பாற்றல் (creativity) செயற்பாட்டின் படிநிலைகளைக் குறிப்பிடுவதுடன் மாணவர்களிடத்தே படைப்பாற்றலை விருத்தி செய்வதில் ஒரு ஆசிரியரின் பங்கினை உதாரணங்களுடன் விளக்குக.

(13 புள்ளிகள்)

03.(அ) நிபந்தனைப்படுத்தல் மூலமாகக் கற்றலை ஏற்படுத்துவது மட்டுமல்ல; நிபந்தனைப்படுத்தல் மூலம் பிழையான கற்றல் ஏற்படின் அதனை நீக்கவும் முடியும் என்பதனை J.B.வாட்சனின் (J.B.Watson) கோட்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) கற்றல் பற்றிய கருத்துக்களை வெளியிட்ட கானே (Robert M.Gagne) கற்றல் வெளிப்பாடுகள் எனக் கருதும் ஐந்து வகையான ஆற்றலுடைமைகளும் எவ்வாறு ஒரு மனிதனால் கற்கப்படுகின்றன என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

04.(அ) ஊக்கலின் அறிவுசார் நோக்கு பற்றி உளவியலாளர்கள் கூறிய கருத்துக்கள் எவ்வாறு தனிமனித விருத்திக்கு துணை செய்கின்றன என்பதனை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) மனித நடத்தையானது முற்றிலும் உணராத காரணங்களினால் ஊக்குவிக்கப்படுகின்றது என்பதை சிக்மன்ட் புரொய்டடின் உளப்பகுப்புக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

(15 புள்ளிகள்)

05.(அ) பொருத்தப்பாடற்ற மாணவர்களை பொருத்தப்பாடுடையவர்களாக மாற்றியமைக்கும் செயன்முறைகளில் ஒரு வகுப்பு ஆசிரியர் எவ்வாறு மக்டூகலின் இயல்பூக்கக் கொள்கையைப் பிரயோகப்படுத்தலாம் என்பதனை நடைமுறை உதாரணங்கள் காட்டி ஆய்வு செய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) ஸ்கின்னரின் தொடர் மீளவலியுறுத்தலின் படி நடத்தை உருவாக்கம் என்ற விடயம் இன்றைய வகுப்பறைச் செயற்பாட்டில் எந்தளவு முக்கியத்துவமுடையதாக இருக்கின்றதென்பதைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

06.(அ) ஆளுமை விருத்தியில் பங்கெடுக்கின்ற காரணிகளை வரிசைப்படுத்திக் காட்டுவதுடன் ஆளுமை தொடர்பான மாறிகளின் ஊடாகக் கற்றுக் கொள்ளும் நடத்தைக் கோலங்கள் பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பவ்லொவ் (Ivan Petrovich Pavlov) தனது பழைய நிபந்தனைப் பாட்டுக்கொள்கையில் கூறும் பின்வரும் விடயங்களுக்கு நடைமுறை உதாரணங்களுடன் விளக்கம் தருக.

(i) நிபந்தனைப்பாடு அழிதல்

(ii) தூண்டி பொதுமையாக்கம்

(iii) உயர்நிலை நிபந்தனைப்பாடு

(15 புள்ளிகள்)

*****